# பெற்றோரை வணங்குவோம்.



அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்.

# அம்மை அப்பனை வணங்குவோம்.




நமசிவாய வாழ்க.

எம்மைக் காப்பவர் பெற்றோர்.




தாய் தந்தை பேண்.

உலகைக் காப்பவர் சிவபெருமான்.



காலையும் மாலையும்
கடவுளை வணங்குவோம்.

# ஞான சம்பந்தர் கதை




அப்பா கோயிலுக்குச் சென்றார்.
அவருடன் குழந்தையும் சென்றது.
அப்பா குளத்தில்
குளிக்க இறங்கினார்.

அப்பாவைக் காணவில்லை.



“அம்மா, அப்பா” என்று
குழந்தை அழுதது.

சிவபெருமான் உமையம்மையுடன் தோன்றினார்.



உமையம்மை பால் கொடுத்தார்.

குழந்தை ஞானம் பெற்றது.

தேவாரம் பாடியது.

# யார் அந்தக் குழந்தை?



அவரே திருஞான சம்பந்தர்.

**கடவுளை நம்பினோர் கைவிடப்படார்**

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன், விடை ஏறி, ஓர்
தூவெண் மதிசூடி,

காடுடைய சுடலைப்பொடி பூசி என்
உள்ளம் கவர் கள்வன்,

ஏடுடைய மலரான் முனைநாள்
பணிந்தேத்த அருள் செய்த


பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே.

திருச்சிற்றம்பலம்


# தினமும் செய்வோம்



காலையில் எழுவோம்.



சுத்தமாகக் குளிப்போம்.



திருநீறு பூசுவோம்.




கடவுளை வணங்குவோம்.




சைவ உணவு உண்போம்.



பாடசாலை செல்வோம்.



ஆசிரியர் சொற்படி நடப்போம்.




பாடம் படிப்போம்.




வீட்டு வேலைகளில்
உதவுவோம்.



மாலையில்
விளையாடுவோம்.




கை, கால், முகம்
கழுவுவோம்.



கடவுளை
வணங்குவோம்.



பாடம் படிப்போம்.



கதை கேட்போம்.



நேரத்திற்கு
நித்திரை
செய்வோம்.

# எல்லோரையும் மதிப்போம்.



பெற்றோரை
மதிப்போம்



ஆசிரியரை
மதிப்போம்




மூத்தோரை
மதிப்போம்



எல்லோரையும்
மதிப்போம்

# சிவசின்னம்



காலையும் மாலையும்
கடவுளை வணங்குவோம்.
"சிவசிவ" என்று சொல்லி
திருநீறு பூசுவோம்.

"பூசுவதும் வெண்ணீறு"

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு

சுந்தரமாவது நீறு
துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு
சமயத்தில் உள்ளது நீறு

செந்துவர்வாய் உமை பங்கன்
திருவாலவாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

# சரஸ்வதி பூசை



கல்வித் தெய்வம் சரஸ்வதி
சரஸ்வதியை வாணி என்றும்
அழைப்போம். சரஸ்வதிக்கு பூசை
செய்வோம்.


ஏடு தொடங்குவோம்
பாடம் படிப்போம்

# தைப்பொங்கல்



தை மாதம் முதல் நாளில்
வீட்டை அலங்கரிப்போம்.
கோலம் போடுவோம்.
புதுப் பானையில் பொங்குவோம்.

சூரியனுக்குப் படைப்போம்.
உண்டு மகிழ்வோம்.
உழவரை மதிப்போம்.
உறவினருக்குக் கொடுப்போம்.



“பொங்கலோ பொங்கல்”

# பட்டிப் பொங்கல்



பசு பால் தந்தது.

எருது வயல் உழும்.

நன்றி செலுத்துவோம்.

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பிடி அதன் உரு உமை கொள
மிகு கரியது

வடிகொடு தனதடி
வழிபடும் அவர் இடர்

கடி கணபதி வர
அருளினன் மிகுகொடை

வடிவினர் பயில் வலிவலம்
உறை இறையே.

திருச்சிற்றம்பலம்

# திருப்புராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து
ஓதற்கு அரியவன்

நிலவு உலாவிய
நீர்மலி வேணியன்

அலகில் சோதியன்
அம்பலத்து ஆடுவான்

மலர் சிலம்படி
வாழ்த்தி வணங்குவாம்.


திருச்சிற்றம்பலம்

# தாயும் ஆனார்





அதற்குப் பல குட்டிகள்

ஒரு நாள் தாய்ப் பன்றி இறந்து விட்டது.




குட்டிகள் பசியினால் அழுதன.



சிவபெருமான் இரங்கினார்.
தாய்ப் பன்றியாக வந்தார்.

குட்டிகளுக்குப் பால் ஊட்டினார்.



அவை பால் குடித்து மகிழ்ந்தன.

கடவுள் கருணை மிக்கவர்.


# தூய்மை



வீட்டில்




கோயிலில்



பாடசாலையில்


சுத்தம் பேணுவோம்.

# அன்பு



ஏழைகளுக்கு உதவுவோம்.

# இரக்கம்



எல்லா உயிர்களிடமும்
இரக்கம் காட்டுவோம்.

# பூசைக்கு உரிய பொருள்கள்

பழம்

பாக்கு

வெற்றிலை


தேங்காய்

பூ

பூமாலை


கர்ப்பூரம்

ஊதுபத்தி




இவற்றைச் சேகரிப்போம்.
பூசைக்குக் கொடுப்போம்.

# மாம்பழக் கதை



மாம்பழம் ஒன்று
இரண்டு பிள்ளைகள்
யாருக்குக் கொடுப்பது ?

"உலகைச் சுற்றி முதலில் வருபவருக்குப் பழம் கிடைக்கும்" என்று கூறினார்.



முருகன் மயில் மீது புறப்பட்டார்.

"உலகைச் சுற்றி வருவது எப்படி?"




பிள்ளையார் யோசித்தார்.

அவர்களைச் சுற்றி வந்தார்.



"அம்மை அப்பரே உலகம்"
என எண்ணினார்.
அவர்களைச் சுற்றி வந்தார்
வணங்கினார்.

பிள்ளையாருக்கு மாம்பழம் கிடைத்தது.



"எல்லா உலகமும் ஆனாய் நீயே"

# சைவப் பண்புகள்

எவரிடமும்
இனிமையாகப் பேசுவோம்.

எல்லோரிடமும்
அன்பாய்ப் பழகுவோம்.

எப்போதும்
உண்மை சொல்லுவோம்.

# ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண், எழுத்திகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டுண்.
10. ஒப்புரவொழுகு.
11. ஓதுவதொழியேல்.
12. ஔவியம் பேசேல்.